



புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






# முதலாமாண்டு நினைவேந்தல்



தோற்றம் : 10.10.1953 மறைவு : 01.05.2022

புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனர்,
மாநில துணைத் தலைவர் - வர்த்தக சங்கங்களின் பேரமைப்பு,
அறமனச்செம்மல்

தெய்வத்திரு. **சீனு.சின்னப்பா** அவர்களுக்கு

**சமாதி வழிபாடு - நினைவேந்தல் - புகழ் அஞ்சலி - ஜோதி வழிபாடு**

நாள் : **01.05.2023 திங்கட்கிழமை**

இடம் : **பேக்கரி மஹராஜ் தோட்ட இல்லம்,**
பெருங்கொண்டான்விடுதி ( தஞ்சை மெயின்ரோடு ), புதுக்கோட்டை.

**இப்படிக்கு**

**பேக்கரி மஹராஜ் குடும்பத்தார்கள்**
**உறவினர்கள், நண்பர்கள்**
**மற்றும் பணியாளர்கள்**

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நீ விதைத்த வியர்வைகள் தான்
கல்லாய் கிடந்த இந்த, பூமிப்பந்து
கர்ப்பம் தரித்து உயிர்பிடித்திருக்கிறது..
இனிய உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்




# மனதின் குரல் நிகழ்ச்சி மக்களின் நல்ல செயல்களை கொண்டாட கூடிய இடமாக இருக்கிறது பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி , மே.1-

பிரதமர் மோடியின் 100-வது மனதின் குரல் நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பு செய்யப்பட்டது. காலை 11 மணி முதல் 11.30 மணி வரை அவரது மன் கி பாத் நிகழ்ச்சி ஒலிபரப்பானது. 100-வது அத்தியாயம் என்பதால் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. அவர் இந்தியில் உரையாற்றியது 22 இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நாடு முழுவதும் மக்கள் கேட்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அதோடு ஆங்கிலம் உள்ளிட்ட 12 வெளிநாட்டு மொழிகளிலும் ஒலிபரப்பானது. மனதின் குரலின் வரலாற்று சிறப்புமிக்க 100-வது நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றியதாவது:- மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி கோடிக்கணக்கான இந்தியர்களின் மன் கி பாத் பிரதிபலிப்பாகும். இது அவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடாகும். இந்த நிகழ்ச்சி நேர்மையான கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கான மிகச் சிறந்த வழித்தடமாக இருந்துள்ளது.

நிகழ்ச்சி குறித்த நாட்டு மக்களின் கடிதங்களை படித்து பார்த்தேன். எனக்கு நெகிழ்ச்சியை கொடுத்தது. மனதின் குரல் நிகழ்ச்சி மக்களின் நல்ல செயல்களை கொண்டாட கூடிய இடமாக இருக்கிறது. சாமானிய மக்களுடன் இணைவதற்காக



ஒரு வழியை இந்த நிகழ்ச்சி எனக்கு அளித்தது. ஒவ்வொரு முறை பேசும் போதும் நாட்டு மக்களிடம் இருந்து விலகாமல் உடன் இருப்பது போல் எண்ணம் வரும். 100-வது நிகழ்ச்சியை எட்டியதற்கு காரணமாக இருந்த நாட்டு மக்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி, நான் என்ற எண்ணத்தில் இருந்து நாம் என்ற எண்ணத்தை எனக்கு கொடுத்துள்ளது. மன் கி பாத் நிகழ்ச்சி எனக்கு ஆன்மீக பயணமாகும். மக்களுடன் தொடர்பு கொள்ள என்னை அனுமதித்தது. தூய்மை இந்தியா உள்ளிட்ட மன் கி பாத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் மக்கள் இயக்கங்களாக மாறியது. மாதாந்திர வானொலி ஒலிபரப்பு மற்றவர்களிடம் இருந்து கற்கும் முக்கிய ஊடகமாக மாறியுள்ளது. நான் உங்களிடம் இருந்து ஒரு போதும் துண்டிக்கப்படவில்லை. இயற்கை வளங்களான நீர்நிலைகள், மலைகள், புனித தலங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

இயற்கை வளங்களை சுத்தமாக வைத்திருப்பது வளர்ந்து வரும் சுற்றுலா துறைக்கு மிகவும் உதவும். வெளிநாடு சுற்றுலா செல்வதற்கு முன்னர் நம் நாட்டில் உள்ள 15 இடங்களுக்கு நாம் செல்ல வேண்டும். சுத்தமான சியாச்சின், பிளாஸ்டிக் மற்றும் இ கழிவுகள் ஆகியவற்றை பற்றி தொடர்ந்து பேசி வருகிறோம். மரம் நடுவது, நீர் நிலைகளை சுத்தம் செய்வது, குழந்தைகளின் கல்வி என பல விஷயங்கள் குறித்து ஏற்கனவே பேசியுள்ளேன். இவ்வாறு மோடி தனது உரையில் கூறியுள்ளார்.

## தமிழக பழங்குடியின பெண்களுக்கு பாராட்டு

தமிழக பழங்குடியின பெண்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த டெரகோட்டா குவளைகளை ஏற்றுமதி செய்தனர். தமிழ்நாட்டில் 20 ஆயிரம் பெண்கள் ஒன்றிணைந்து வேலூரில் உள்ள நாக நதிக்கு புத்துயிர் அளித்தனர். பல பரப்புரைகள் பெண்களால் வழிநடத்தப்பட்டு முயற்சிகளை முன்னுக்கு கொண்டு வர இந்த நிகழ்ச்சி சிறந்த தளமாக உள்ளது. நாட்டின் பெண் சக்தியின் நூற்றுக்கணக்கான எழுச்சியூட்டும் கதைகளை மனதின் குரலில் குறிப்பிட்டு இருப்பது எனக்கு நிறைவான விஷயமாகும். நமது ராணுவமாக இருந்தாலும் சரி, விளையாட்டு உலகமாக இருந்தாலும் சரி பெண்களின் சாதனைகளை பற்றி நான் பேசும்போது அது அதிகமாக பாராட்டப்பட்டது. இவ்வாறு மோடி பேசினார்.

### அறந்தாங்கி அருகே வைரிவயல் கிராமத்தில்

# வீரமுனிஆண்டவர் சித்திரை மாத திருவிழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி குதிரைவண்டி பந்தயம்

அறந்தாங்கி, மே.1-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே வைரிவயல் கிராமத்தில் பிரசித்தி பெற்ற வீரமுனிஆண்டவர் திருக்கோயில் உள்ளது, இக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரைமாத புதன்கிழமை வீரமுனி ஆண்டவருக்கு சந்தனகாப்பு சாற்றி மாட்டுவண்டி குதிரைவண்டி பந்தயம் நடைபெறுவது வழக்கம். அதேபோல் 83-வதுஆண்டாக நடைபெற்ற மாட்டுவண்டி, குதிரை வண்டி பந்தயத்தில் சென்னை,கோவை, ஈரோடு, திருச்சி, சேலம், மதுரை, தஞ்சாவூர், ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட



மாட்டுவண்டி மற்றும் குதிரை வண்டிகள் போட்டியில் பங்குபெற்றது.

பெரியமாடு, கரிச்சான்மாடு என இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் 37 இரட்டைமாட்டு வண்டிகளும், கரிச்சான் குதிரை மற்றும் பூஞ்சிட்டு குதிரை பிரிவுகளில் 100 குதிரைகளும், மொத்தம் 27 இரட்டைமாட்டு வண்டிகளும் ,100 குதிரைகளும் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட பந்தய இலக்கினை ஒன்றையொன்று முந்திச்சென்றன.

போட்டியில் வெற்றி பெற்ற மாட்டுவண்டி மற்றும் குதிரை வண்டி உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ. 5 லட்சம் ரொக்கப்பரிசும் சிறப்புக்கோப்பைகளும் வழங்கப்பட்டது, சாலையின் இருபுறமும் நின்று ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கண்டு ரசித்தனர், நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.




### புலவனூரில் மோசடி கிரயம் பெற்ற இடத்தில்

# கட்டுமானம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட எஸ்பி யிடம் புகார் மனு




தென்காசி, மே.1-

தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள புலவனூரை சேர்ந்த அருணாசலம் என்பவர் தென்காசிமாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனுவினை அளித்துள்ளார் அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது, நான் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன் எதிர்மனுதாரர்களாகிய திருமலை முருகன், செல்லத்துரை, சக்திவேல் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் கீழக்கடையம் கிராமம் இடமானது எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது.

மேற்படி இடத்திற்கு பட்டாவின் படி எனது தகப்பனார் சுப்பிரமணிய நாடார் பெயருக்கு பட்டா, தீர்வை ரசீதுகள் உள்ளது மேலே குறிப்பிட்ட எதிரிகள் எனது சித்தப்பா முப்புடாதி என்பவரிடம் 2011 ல் மோசடியாக கிரையம் பெற்று அதில் ஒன்றாவது நபர் ஒரு வீடும் கட்டி விட்டார் இது சம்பந்தமாக அப்போதே எனது தந்தை அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து அம்பாசமுத்திரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விட்டார், மேற்படி மோசடியாக கிரயம் பெற்ற இடத்தில் மேற்கண்ட நபர்கள் வீடுகள் கட்டவும் செட் அமைக்கவும் முயற்சி செய்தார்கள், கடையம் காவல் நிலையத்தில் புகார் செய்து காவல் துறையினர் விசாரித்து வழக்கு நடக்கும் இடத்தில் எந்த கட்டுமானமும் செய்யக்கூடாது என்று எச்சரித்து அனுப்பினர்.

கடந்த மாதம் 15ஆம் தேதி மீண்டும் கட்டுமானம் செய்ய எதிரிகள் முயற்சித்த போது கடையம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் ஒண்ணாவது நபர் சிவில் வழக்கு முடிந்த பின்பு கட்டுமானம் கட்டுவதாக எழுதி கொடுத்து சென்றார், மற்றவர்களை விசாரிக்கவில்லை எனவே மேற்படி எதிரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படியும், காவல்துறையினர் என்னை அழைத்து மிரட்டாத வகையில் சட்ட நடவடிக்கை எடுத்து என்னையும் என் குடும்பத்தாரையும் காப்பாற்றும் படி கேட்டுக் கொள்வதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



▶ தென்காசி மாவட்டம் புளியங்குடியில் திமுக நகரச் செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான,எ. அந்தோணிசாமி புதிய பாரிசாள் ஹோட்டல் திறப்பு விழாவில் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டிதிறந்து வைத்தார். புளியங்குடி புதிய காய்கறி தினசரி சந்தை எதிரே திறப்பு விழாவை முன்னிட்டு பிரியாணி விலை ரூ-50, கடை உரிமையாளர் எஸ். மீரான் மாலிக் ஆட்டோ, எஸ். கலில் எஸ். சலீம் ஆகியோர் பொதுமக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர்கள் வள்ளி அண்ணாமலை, சமுத்திரம், ராஜேஸ்வரி, ஸ்டீபன் கார்த்திகா, மகேஷ் பாலகுமாரன், நகரப் பொருளாளர் காஜாமைதீன், ஷேக் மைதீன், அன்பு ராஜன், மைதீன், டீக்கடை காஜா மைதீன் மற்றும் ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் சார்பாக 13 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து அணிக்கான கூடைப்பந்து தேர்வில் 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்றனர். இந்நிகழ்வில் புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் தலைவர் தாய் மாணவன். புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் செயலாளர் குயின்டன், புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் முக்கிய பொறுப்பாளர் காளிதாஸ், புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் இணைச் செயலாளர்கள் சிவா, கிரண், அறந்தாங்கி கூடை பந்து கழகத்தின் பயிற்றுனர் மணி மற்றும் மாணவ,மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜனின் ஒரிஜினல் ஆடியோவும் உள்ளது அண்ணாமலை மீண்டும் பரபரப்பு

சென்னை, மே.1-

நிதிஅமைச்சர் பழனி வேல்தியாகராஜனின் ஆடியோ என்பது அவர் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலம். இந்த விஷயத்தில் அவர் குற்றவாளி இல்லை. அவர் பேசிய ஒரிஜினல் ஆடியோவையும், எங்கே, எப்போது, யாரிடம் பேசப்பட்டது என்பதையும் கொடுக்க தயாராக இருக்கிறேன் என பா.ஜனதா தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை நடுக்குப்பத்தில் பிரதமர் மோடியின் மனதின் குரல் நிகழ்ச்சியை தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை, கட்சி தொண்டர்கள் மற்றும் பொது மக்களுடன் அமர்ந்து பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:- தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு எதிரான மன நிலையை வாக்குகளாக மாற்றுவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளோம். தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.தி.மு.க.வும் உள்ளது. வருகிற பாராளுமன்ற தேர்தலில் 40-க்கு 40 தொகுதிகளை கைப்பற்றுவதுதான் எங்கள் இலக்கு. தி.மு.க.வினர் மீது நான் சொத்துப் பட்டியல் வெளியிட்டதற்காக கனிமொழி எம்.பி. நோட்டீஸ் அனுப்பி உள்ளார்.

அதில் அவர் கலைஞர் தொலைக்காட்சியில் தான் பங்குதாரர் இல்லை என்று



குறிப்பிடவில்லை. சில மாதங்களுக்கு முன்பு வரை இருந்ததாகவும், அதன்பிறகு பங்குகளை விற்றுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். அதாவது அவர் பங்குதாரராக இருந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். பங்குகளை விற்றிருந்தால் அந்த பணம் எங்கே போனது? ஒவ்வொருவரின் சொத்து மதிப்புதான் எனது குற்றச்சாட்டு. நிதிஅமைச்சர் பழனி வேல் தியாகராஜனின் ஆடியோ என்பது அவர் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலம். இந்த விஷயத்தில் அவர் குற்றவாளி இல்லை. என்ன நடக்கிறது என்பதைத்தான் தெரிவித்து இருக்கிறார்.

வழக்கு கோர்ட்டுக்கு போகும்போது அவர் பேசிய ஒரிஜினல் ஆடியோவையும், எங்கே, எப்போது, யாரிடம் பேசப்பட்டது என்பதையும் கொடுக்க தயாராக இருக்கிறேன். கட்சியின் தலைவர் பதவியில் இருக்கும் எனக்கு, எனக்கான பாதையை அமித்ஷா, நட்டா ஆகியோர் ஏற்கனவே வகுத்து தந்துவிட்டார்கள். இப்படித்தான் நீங்கள் செயல்பட வேண்டும் என்று அவர்கள் கொடுத்த அறிவுரைகளை ஏற்பது தான் எனது வேலை. மெட்ரோ ரெயில் முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. யிடம் நான் புகார் கொடுத்து உள்ளேன். ஜி ஸ்கொயர் சோதனைக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அந்த நிறுவனம் பற்றி நான் புகார் அளிக்கவும் இல்லை. 6 நாட்கள் சோதனை நடந்ததில் இருந்து ஏதோ பெரிய விஷயம் இருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு ரூ.2010 கோடி சொத்து மதிப்பு என்று நான் தெரிவித்ததை அவர் இல்லை என்று மறுத்து உள்ளார். ஒருவேளை நமது சொத்து மதிப்பு ரூ.20 ஆயிரம் கோடியாச்சே. ரூ.2000 கோடி என்று குறைத்து சொல்லிவிட்டாரே என்று வருத்தப்படுகிறாரோ என்னவோ? வழக்கு கோர்ட்டுக்கு வரட்டும். கோர்ட்டில் சொல்வதற்கு இன்னும் பல விஷயங்கள் உள்ளன. நான் சொத்து மதிப்புகளை வங்கி ஸ்டேட்மெண்டுடன் வெளியிட்டுவிட்டேன். தி.மு.க.வினர் குறைந்தபட்சம் ஒருமாத ஸ்டேட்மெண்டை வெளியிட்டுவிட்டு பேசட்டும் பார்க்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# அரியலூர் அருகே மாவட்ட போட்டோ மற்றும் வீடியோ கிரா:பர்ஸ் நலச்சங்க கூட்டம்

அரியலூர், மே.1-

அரியலூர் அருகே வி.கைகாட்டியில் அரியலூர் மாவட்ட போட்டோ & வீடியோ கிராபர்ஸ் நலச்சங்க செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் அருகே, வி. கைகாட்டியில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற, அரியலூர் மாவட்ட போட்டோ & வீடியோ கிரா:பர்ஸ் நலச்சங்க செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்துக்கு, அதன் மாவட்டத் தலைவர் எஸ். மோகன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஆர். கண்ணன் வரவேற்று பேசினார், மாவட்டப் பொருளாளர் ஆர். கொளஞ்சி, கண்டிராதித்தம் சிவா, பாஸ்கர், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

17.02 .2022 முதல் 29.04 .2023 வரையிலான, சங்கத்தின் வரவு செலவு கணக்கு அறிக்கையை, பொருளாளர் ஆர். கொளஞ்சி தாக்கல் செய்து




பேசினார். சங்கம் சார்பில், ஆண்டிமடத்தில் 183 வது உலகப் புகைப்பட தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், அரியலூர் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தது,சோனா ஸ்டுடியோ ஜெகதீசன், அரியலூர் மாவட்ட சங்கத்திற்கு இடம் வாங்குவதற்காக, முதன் முதலாக தனது சார்பில் நிதி கொடுத்து ஊக்கப்படுத்தியது உட்பட, 14 தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன, சங்க உறுப்பினர்களின் வாத, பிரதிவாதங்களும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அரியலூர் மாவட்ட போட்டோ & வீடியோ கிராபர்ஸ் நலச்சங்க மாவட்ட அமைப்பாளர் ஆர். கர்ணன், துணைத் தலைவர்கள் எம். கனகசபை, பி. வெங்கடேசன், துணை செயலாளர் எஸ். ராதாகிருஷ்ணன், மற்றும் சங்க உறுப்பினர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

# முறைகேடுகளை களைய எச்1பி விசா வழங்கும் முறையை நவீன மயமாக்க அமெரிக்கா திட்டம்

வாஷிங்டன் , மே.1-

வெளிநாடுகளில் இருக்கும் திறமையான பணியாளர்கள் தங்கள் நாட்டில் வந்து பணிபுரிவதற்காக அமெரிக்காவில்எச்1பிவகை விசா வழங்கப்படுகிறது. இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உள்ள திறமை வாய்ந்த பணியாளர்களை வேலையில் அமர்த்த இந்த விசாவையே அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் பெரிதும் நம்பியுள்ளன.

இந்த விசாவை



வாங்கிய 6 ஆண்டுகள் கழித்து நிரந்தர குடியுரிமை அல்லது கிரீன் கார்டு பெற முடியும் என்பதால் இதற்கு எப்பொழுதுமே மவுசு அதிகம். இந்த நிலையில் எச்1பி விசா வழங்குவதில் சில நிறுவனங்கள் முறைகேட்டில் ஈடுபட்டு வருவதாக அரசாங்கத்துக்கு தொடர்ந்து புகார்கள் சென்றது. எனவே இந்த எச்1பி வகை விசாவை வழங்கும் முறையை நவீன மயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி இந்த எச்1பி விசாக்கள் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். தேவைப்பட்டால் மேலும் 3 ஆண்டுகளுக்கு இதனை நீட்டிக்கலாம் உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

# தென் சீனக்கடல் பகுதியில் பாதுகாப்பற்ற செயலை நிறுத்த வேண்டும் சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன் , மே.1-

தென் சீனக்கடல் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்து வருகிறது. சீனாவுக்கு எதிராக மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் உள்ளன. இவ்விவகாரத்தில் சீனா-அமெரிக்கா இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு இருந்து வருகிறது. சீனாவுக்கு எதிராக உள்ள நாடுகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது. இதற்கிடையே தென் சீன கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் எல்லை அருகே சீன கப்பல் ரோந்து பணியில் ஈடுபட்டது. அங்கு பிலிப்பைன்ஸ் கடற்படை கப்பலும் ரோந்து



சென்றது. அப்போது 2 கப்பலும் மோதுவதுபோல் அருகருகே வந்தது. பிலிப்பைன்ஸ் கப்பல் பின்வாங்கியதால் மோதல் தவிர்க்கப்பட்டது.

இது தென் சீன கடல் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த நிலையில் சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. சர்ச்சைக்குரிய தென் சீன கடலில் ஆத்திரமூட்டும் மற்றும் பாதுகாப்பற்ற செயலை சீனா நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் கூறும்போது, சீனா, அதன் ஆத்திரமூட்டும் மற்றும் பாதுகாப்பற்ற நடத்தையில் இருந்து விலகுமாறு கேட்டுக் கொள்கிறோம். பிலிப்பைன்ஸ் ஆயுதப்படைகள் மீதான எந்தவொரு தாக்குதலும் அமெரிக்காவை பதிலடிக்கு தூண்டும் என்றார். சீனா தனது கடல் எல்லையை தாண்டி வந்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### பஞ்சாப் தொழிற்சாலையில் வாயு தாக்கி 11 பேர் பரிதாபமாக

# உயிரிழப்பு

## 5 பேர் பெண்கள், 6 பேர் ஆண்கள். இரண்டு சிறுவர்களும் அடக்கம் 4 பேர் சுய நினைவு இன்றி மருத்துவமனையில் அனுமதி: மாநில முதல்வர் உறுதி

லூதியானா, மே. 1-

பஞ்சாபின் லூதியானா நகரில் தொழிற்சாலை ஒன்றில் இருந்து வெளியான வாயு தாக்கியதில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் சுயநினைவு இழந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.



கியாஸ்புரா பகுதியில் பால் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இங்கு ஏராளமான தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். இந்த தொழிற்சாலையில் நேற்று காலை 7 மணியளவில் வாயுக்கசிவு ஏற்பட்டது. குளிரூட்டும் இயந்திரத்தில் இருந்து வாயு கசிவு ஏற்பட்டு தொழிற்சாலை முழுவதும் பரவியது. இதில் வேலை பார்த்து கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. சிலர் மயங்கி கீழே விழுந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் தேசிய பேரிடர் மீட்பு படை, தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் முககவசம் அணிந்து தொழிற்சாலைக்குள் சென்று தொழிலாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இதையடுத்து, 11 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 5 பேர் பெண்கள், 6 பேர் ஆண்கள். இதில், 10 மற்றும் 13 வயதுள்ள இரண்டு சிறுவர்களும் அடக்கம். 4 பேர் சுய நினைவு இன்றி காணப்பட்ட நிலையில், அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதோடு, மேலும் 4 பேர் மருத்துவ சிகிச்சையில் உள்ளனர்.

அப்பகுதியை போலீசார் சீல் வைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இதற்கிடையே தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய வாயு கசிவு 300 மீட்டர் சுற்றளவுக்கு பரவியது. இதனால் அப்பகுதி மக்கள் மூச்சு திணறல், கண் எரிச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டனர். சிலர் வீடுகளில் மயங்கி விழுந்தனர். அவர்களை மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதையடுத்து அப்பகுதிக்குள் யாரும் நுழைய வேண்டாம் என்று போலீசார் அறிவுறுத்தினார்கள். மேலும் வாயுக்கசிவு பகுதி அதிக மக்கள் வசிக்கும் இடம் என்பதால் அங்கிருந்து அவர்களை உடனடியாக வெளியேற்றினர்.

வாயுக் கசிவுக்காண காரணம் தெரியவில்லை என்றும், எத்தகைய வாயு வெளியேறியது என்பது இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை என்றும் லூதியானா காவல் ஆணையர் மன்தீப் சிங் சித்து தெரிவித்தார். இந்த சம்பவத்திற்கு ஆழ்ந்த வேதனை தெரிவித்துள்ள பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், சாத்தியமான அனைத்து உதவிகளும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.



புதுக்கோட்டை மறைமலை நகரில் அமைந்திருக்கும் சிவ ஞான பவன் திறப்பு விழாவானது நேற்று நடைபெற்றது. தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலை வகித்தார். பிரம்ம குமாரிகள் மவுண்ட் அபு பொதுச் செயலாளர் மிருத்யுஞ்ஜயா கலந்துகொண்டு திறந்து வைத்தார். மதுரை துணை மண்டல இயக்குனர் பிரம்மா குமாரி மீனாட்சி ஆசிர்வாதம் வழங்கினார். நிகழ்வில் மருத்துவர் ராமதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பிரம்மா குமாரிகள் புதுகை கிளை நிலைய பொறுப்பாளர் பாலாஜி விழாவை ஒருங்கிணைப்பு செய்தார்.





புதுக்கோட்டை,ஆலங்குடி சாலை, அண்ணா சிலை அருகில், தெற்கு நான்காம் வீதியில் இந்தியாவின் முன்னணி நிறுவனமான ஆப்பிள் ஷாப்பிங் மார்ட் திறப்பு விழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்த விழாவில் விஜய் டிவி தொடரின் பிரபலங்கள் தனம், பாக்கியலட்சுமி, மீனா, ராதிகா, ரீத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திறப்பு விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நிச்சய பரிசுகள் வழங்கப்பட்டன அதேபோல் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மெஹந்தி இலவசமாக போடப்பட்டது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் ஆப்பிள் ஸ்டோர் புதுக்கோட்டை கிளை நிர்வாகிகள் அதன் உரிமையாளர்கள் வரவேற்று சிறப்பித்தனர்.

## அரிமளம் பேரூராட்சியில் ரூ.6 இலட்சம் செலவில் புதிய கலையரங்கத்தினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்

அரிமளம் , மே. 1-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் பேரூராட்சி, சிவன்கோவில் அருகில், புதிய கலையரங்கத்தினை சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி நேற்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது.



பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; நேற்றைய தினம் அரிமளம் பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6 இலட்சம் செலவில் புதிய கலையரங்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார்கள். அதன்படி இப்பகுதியில் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் இக்கலையரங்கத்தினை இப்பகுதி பொதுமக்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் பயன்படுத்திக்கொண்டு தங்களது கலைத் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். எனவே தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், அரிமளம் பேரூராட்சித் தலைவர் மாரிக்கண்ணு முத்துக்குமார், இளையராஜா, பேரூராட்சித் துணைத் தலைவர் கருப்பாயி வெள்ளைச்சாமி, செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மே தின நினைவு சின்னத்தில் மலர் அஞ்சலி செலுத்துகிறார்

சென்னை , மே. 1-

மே 1 தொழிலாளர் தினத்தையொட்டி சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மேதின பூங்காவில் உள்ள நினைவு சின்னத்திற்கு தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலையில் மலர் அஞ்சலி செலுத்துகிறார். தி.மு.க. தொழிற்சங்கமான தொ.மு.ச. பேரவை சார்பில் மே தின விழா இன்று மே தின பூங்காவில் நடைபெறுவதையொட்டி அதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி சிறப்புரையாற்றுகிறார்.



இதையொட்டி தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் கருப்பு, சிவப்பு சீருடையுடன் பேரவை கொடியுடன் வர வேண்டும் என்று தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது.

## மே மாதம் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நடக்கும் விழாக்கள்

திருப்பதி ,மே. 1-

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் அடுத்த மாதம் (மே) நடக்கும் விழாக்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:- மே 1-ந்தேதி சர்வ ஏகாதசி, பத்மாவதி பரிணயோற்சவம் நிறைவு, 4-ந்தேதி நரசிம்ம ஜெயந்தி. தரிகொண்டா வெங்கமாம்பா ஜெயந்தி, அனந்தாழ்வார் சாத்துமுறை, 5-ந்தேதி பவுர்ணமி கருட சேவை, 6-ந்தேதி அன்னமாச்சாரியார் ஜெயந்தி, 7-ந்தேதி பராசரபட்டர் வருட திருநட்சத்திரம், 14-அனுமன் ஜெயந்தி, 24-ந்தேதி நம்மாழ்வார் ஜெயந்தி உற்சவம் தொடக்கம், 28-ந்தேதி போக சீனிவாசமூர்த்திக்கு சிறப்பு சஹஸ்ர கலசாபிஷேகம், 30-ந்தேதி வரதராஜசாமி ஜெயந்தி. மேற்கண்ட விழாக்கள் நடக்கின்றன.



## "அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பதவியை பறிக்கக் கூடாது" ஹெச். ராஜா வலியுறுத்தல்

பழநி, மே. 1-

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பதவியை பறிக்கக் கூடாது என்று பாஜக மூத்த தலைவர் ஹெச். ராஜா வலியுறுத்தியுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் பழநியில் தமிழ்நாடு பிராமண ஸமாஜம் சார்பில் நடைபெற்ற பிராமண குடும்ப ஸம்மேளன நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பாஜக முன்னாள் தேசிய செயலாளர் ஹெச்.ராஜா பங்கேற்றார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: "கர்நாடகா சட்டமன்ற தேர்தலில் 130 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று பாஜக மீண்டும் ஆட்சி அமைக்கும். பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, திமுகவைச் சேர்ந்த 16 பேரின் சொத்துபட்டியலை வெளியிட்டார். இந்த சொத்து எங்கிருந்து வந்தது என்பதில் தான் ஊழல் உள்ளது.

குறிப்பாக,ஜிஸ்கொயர் நிறுவனம் தொடர்பாக சர்ச்சை எழுந்தபோது, அந்த நிறுவனத்துக்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றார் மு.க.ஸ்டாலின். தற்போது ஜி ஸ்கொயர் நிறுவனத்தில் 142 மணி நேரம் வருமான வரித்துறை சோதனை நடந்துள்ளது. ஆனால் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருமான வரித்துறை சோதனை நடத்தி எங்களை மிரட்ட முடியாது என்கிறார். ஊழல் செய்பவர்கள் தமிழக அமைச்சரவையில் இருக்க முடியாது என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினால் திமுக அமைச்சர்களே இருக்க முடியாது. புதிதாக அமைச்சர் ஆனவர்களிடமும் ஊழல் உள்ளது.

கடந்த 1976-ல் எப்படி ஊழலால் திமுக அரசு போனதோ, அதேபோன்று இந்த முறையும் திமுக அரசு ஊழலால் போகும். பொது இடத்தில் ஏடிஎம் இயந்திரம் போல் மதுபானம் விற்பனை செய்யும் இயந்திரத்தை திமுக அரசு வைத்துள்ளது. 34 ஆண்டுகள் மது என்றால் என்னவென்று தெரியாமல் இருந்த தமிழர்களை, 1971 ஆகஸ்ட் 31-ல் சாராயக் கடைகளை திறந்து விட்டு குடிமகன்களாக மாற்றியதும், தமிழர்களின் குடியைக் கெடுத்ததும் தான் திராவிட மாடல். இப்படி ஒரு மோசமான அரசு தமிழகத்தில் இருப்பது ஒவ்வொரு தமிழனுக்கும் மானக்கேடு.

அமைச்சர் பி.டி. ஆர். பழனிவேல் தியாகராஜன் என்ன காரணத்துகாக ஆடியோ வெளியிட்டாரோ, அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். அவரை அமைச்சர் பதவியில் இருந்து முதல்வர் எடுத்தார் என்றால், பழனிவேல் தியாகராஜன் சொன்னது உண்மையாகும். உண்மையை சொன்னதற்காகவே பதவியில் இருந்து எடுத்ததாக கருதப்படும். எனவே,அவரை அமைச்சர் பதவியில் இருந்து எடுக்க கூடாது. துறையையும் மாற்றக்கூடாது,"இவ்வாறு அவர் கூறினார்.

## 24 மணி நேர சட்டவிரோத மது விற்பனையை தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் அன்புமணி வலியுறுத்தல்

சென்னை , மே. 1-

பூதிநத்தம் கிராமத்தில் மது விற்பனைக்கு எதிராக பெண்கள் பொங்கியெழுந்துள்ள நிலையில் 24 மணி நேர சட்டவிரோத மது விற்பனையை தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்துநேற்றுஅவர் வெளியிட்டுள்ள தனது ட்விட்டர் பதிவுகளில் கூறியுள்ளதாவது: "தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியை அடுத்த பூதிநத்தம் கிராமத்தில் 24 மணி நேரமும் சட்டவிரோதமாக மது விற்பனை செய்து வந்த ஜெயராமன் என்பவரின் வீட்டுக்குள் புகுந்த அந்த ஊரைச் சேர்ந்த பெண்கள், அங்கு பதுக்கிவைக்கப்பட்டிருந்த மதுப்புட்டிகளை உடைத்து தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். அவர்களின் போராட்ட வடிவம் சரியா? என்ற வினா ஒருபுறம் இருந்தாலும், அவர்களின் நோக்கமும், உணர்வும் பாராட்டத்தக்கவை. அவர்களை வணங்குகிறேன்.

பூதிநத்தம் பகுதியில் 24 மணிநேரமும் மதுவிற்பனை செய்யப்படுவதால், மாணவர்களும், சிறுவர்களும் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். சட்டம் - ஒழுங்கு சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. ஆனால், அது குறித்து அதிகாரிகளிடம் பலமுறை மனு கொடுத்தும் எந்த பயனும் ஏற்படாத நிலையில் தான் பெண்கள் பொங்கியெழுந்து போர்க்கோலம் பூண்டிருக்கின்றனர்.

பூதிநத்தம் கிராமத்தில் மட்டும் தான் இத்தகைய நிலை என்றில்லை. தமிழ்நாடு முழுவதும் இதே நிலை தான். மாநிலம் முழுவதும் சட்டப்பூர்வமாக 5,329 மதுக்கடைகள் உள்ளன என்றால், ஒவ்வொரு கடைக்கும் 5 முதல் 10 சந்துக் கடைகள் உள்ளன. அவற்றில் 24 மணி நேரமும் மது விற்பனை செய்யப்படுகிறது. அதனால் சட்டம் - ஒழுங்கு சிக்கல்களும், சில நேரங்களில் கொலைகளும் நிகழ்கின்றன. இதற்கு முடிவு கட்டப்பட வேண்டும்!

தமிழ்நாடு முழுவதும் சட்டவிரோதமாக மது விற்பனை செய்யப்படும் சந்துக்கடைகளை மூட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமின்றி, தமிழ்நாட்டில் உள்ள மதுக்கடைகளை படிப்படியாக மூடி முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## நெல்லை, தென்காசி, தூத்துக்குடியில் தொடரும் கோடை மழை

நெல்லை, மே. 1-

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் கோடை மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் மாவட்டங்களில் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவி வருகிறது. நெல்லை மாவட்டத்தில் சேரன்மகாதேவி, களக்காடு, அம்பை, ராதாபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் பலத்த மழை பெய்தது. குறிப்பாக ராதாபுரம், கூடங்குளம், இடிந்தகரை உள்ளிட்ட பகுதிகளில் கனமழை கொட்டியது. ராதாபுரத்தில் நேற்று காலை நிலவரப்படி அதிகபட்சமாக 8.8 சென்டிமீட்டர் மழை கொட்டித்தீர்த்தது.

தென்காசி மாவட்டத்தில் ராமநதி, அடவிநயினார் உள்ளிட்ட அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் விட்டு விட்டு மழை பெய்தது. அதிகபட்சமாக ராமநதி அணையில் 15 மில்லிமீட்டர் மழை பெய்தது. அடவி நயினாரில் 3 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. சங்கரன்கோவில், சிவகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மாலையில் கனமழை பெய்தது. சிவகிரியில் 18 மில்லிமீட்டரும், சங்கரன்கோவிலில் 10 மில்லிமீட்டரும் மழை பெய்தது. தொடர்ந்து ஒரு வாரத்திற்கும் மேலாக பெய்துவரும் கோடை மழை காரணமாக குற்றாலம் மெயினருவிக்கு நீர்வரத்து சற்று ஏற்பட்டுள்ளது. அதில் சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்கின்றனர்.



தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தாறு, கடம்பூர், கழுகுமலை உள்ளிட்ட பகுதிகளில் பெய்த மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. ஒருசில இடங்களில் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கடம்பூரில் அதிகபட்சமாக 42 மில்லிமீட்டரும், கழுகுமலை, கயத்தாறில் தலா 34 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது. கோவில்பட்டி, எட்டயபுரம், சூரன்குடியிலும் பரவலாக மழை பெய்தது. குறிப்பாக கோவில்பட்டியில் பலத்த மழை கொட்டியது. அங்கு அதிகபட்சமாக 56 மில்லிமீட்டரும், எட்டயபுரத்தில் 49.5 மில்லிமீட்டரும் மழை பதிவாகியது.

# தண்ணீர் குடம் கொடுத்து தண்ணீர் பந்தல் திறந்து வைத்த அதிமுக முன்னாள் அமைச்சர்



சென்னை, மே 1 -
சென்னை, திருவொற்றியூர், மேற்கு பகுதி அதிமுக சார்பில் மணலி, எண்ணூர், எர்ணாவூர் திருவொற்றியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அதிமுகவினர் தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

திருவொற்றியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.குப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் மூர்த்தி கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பொதுமக்களுக்கு தண்ணீர், இளநீர் மோர், தர்பூசணி, வெள்ளரிப்பிஞ்சு, நுங்கு மற்றும் பெண்களுக்கு தண்ணீர் குடம், புடவை வழங்கினார். இதில் தொண்டர்கள் ஒருவர் எம்ஜிஆர் வேடமணிந்து கையசைத்தபடி வந்தார். இதனை பார்த்த தொண்டர்கள் ஆரவாரம் செய்தனர்.

நிகழ்ச்சியில் 7 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.கார்த்திக், 21 வது வார்டு ராஜேஷ், வட்டசெயலாளர் கண்ணன், பட்டாபிராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஸ்டெப் செவன் அகாடமி ஆப் டான்ஸ் சார்பில் மாணவர்களுக்கு கோடைக்கால பயிற்சி முகாம்

திருவள்ளூர், மே, 01 -
திருவள்ளூர் மாவட்டத்தில், கும்மிடிப்பூண்டி, பிரித்வி நகரில் ஸ்டெப் செவன் அகாடமி ஆப் டான்ஸ் சார்பில் நாட்டிய மயூரி சோ.கோகில லஷ்மி சிறுவர்களுக்கு கோடைக்கால கேம்ப் ஏற்பாடு செய்து உள்ளனர்.

இந்த கோடைக்கால கேம்ப் மே 1 ஆம் தேதி தொடங்கி மே 20 வரை நடைபெற உள்ளது. இதில் பரதநாட்டியம், ஃபிரிஸ்டைல் டான்ஸ், ஓவியம், யோகா, ஸ்போக்கன் இங்கிலிஷ், கம்ப்யூட்டர் உள்ளிட்ட பல்வேறு கோர்ஸ்கள் கற்றுக் கொடுக்கப்படும். கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு பயிற்சி முடித்ததற்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று




குரு, நாட்டிய கலா ரத்னா கோகில லஷ்மி தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையில் இலவசமாகவும் மற்றும் மிகக்குறைந்தகட்டணத்தில் பயிற்சிவழங்கப்படும்என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. வகுப்புகள் மதியம் 1 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஒன்றியம் கைக்குறிச்சி ஊராட்சி அரசு நூலகத்தில் மகாராணி ரோட்டரி சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் லட்சுமி அண்ணாமலை மற்றும் ரோட்டரி ஆளுநர் ஜெரால்டு, நிர்வாகிகள் சிவாஜி, சினேகா உள்ளிட்ட பலர் பங்கேற்று இலவச படிப்பகத்தை ஊராட்சி மன்ற தலைவர் ரெங்கநாயகி டாக்டர் சுபா செல்வம் தலைமையில் துவக்கி வைத்தனர். இந்த நூலகத்தில் ஐஏஎஸ் ஐபிஎஸ் உள்ளிட்ட போட்டி தேர்வுகளுக்கு தேவையான ரூபாய் ஒன்றரை லட்சம் மதிப்பிலான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளது. போட்டி தேர்வுக்கு தயாராகும் இளைஞர்கள் இந்த நூலகத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# அரசு புலிகள் காப்பகத்தில் அனுமதியின்றி நுழைந்த முதியவருக்கு ரூ.25,000 அபராதம்



ஈரோடு, மே, 1
ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகே அடர்ந்த வனப்பகுதியில் புலிகள் காப்பகம் உள்ளது. இந்த வனப்பகுதிகளில் கரடி, மான், சிறுத்தை யானை, புலிகள் என பல்வேறு வன விலங்குகள் வசித்து வருகின்றன.

புலிகள் காப்பகத்துக்குட்பட்ட பகுதிகளில் வன அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ரோந்து சென்று கண்காணித்து வருகிறார்கள். இந்த நிலையில் கேர்மாளம் வனச்சரகம் குத்தியாலத்தூர் காப்புக்காட்டு பகுதியில் வனச்சரகர் தினேஷ் தலைமையில் வனத்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

அப்போது வனப்பகுதியில் இருந்து ஒரு முதியவர் வந்தார். இதை தொடர்ந்து வனத்துறையினர் அவரை பிடித்து விசாரித்தனர். இதில் அவர் கர்நாடகா மாநிலம் அண்டே குருபன்தொட்டி கிராமத்தை சேர்ந்த ராம்ஜி நாயக்கர் (வயது 50) எனவும், அவர் பாதுகாக்கப்பட்ட அரசு காப்புக் காட்டு புலிகள் காப்பக பகுதியில் சட்ட விரோதமாக நுழைந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து ஆசனூர் வனக்கோட்ட துணை இயக்குனரின் உத்தரவின்படி அந்த முதியவருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் காப்புக் காடுகளில் அத்துமீறி நுழையக்கூடாது என வனத்துறையினர் கடுமையாக எச்சரித்து அனுப்பி வைத்தனர்.

## தென்கொரியாவுடன் ஒப்பந்தம்

# அமெரிக்காவுக்கு வடகொரியா பகிரங்க எச்சரிக்கை

பியாங்யாங், மே, 01 -
கொரிய தீபகற்ப பகுதியில் சமீப காலமாக வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகளால் தொடர் பதற்றம் நிலவி வருகிறது. இதனால் தங்களது நாட்டின் பாதுகாப்பு கருதி அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கடந்த 26-ந் தேதி அமெரிக்காவின் அணு ஆயுதநீர்மூழ்கிக்கப்பலை தனது நாட்டின் கடற்பகுதியில் நிறுத்தும் ஒப்பந்தத்தில் தென்கொரியா கையெழுத்திட்டது. இது தென்கொரியாவின் மீது அமெரிக்காவின்



அணுசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் என கூறப்படுகிறது. இந்த நிலையில் வடகொரிய தலைவரின் சகோதரி கிம் யோ ஜாங் இது குறித்து கூறும்போது, ‘தென்கொரியாவுடன் அமெரிக்கா மேற்கொண்டுள்ள அணு ஆயுத ஒப்பந்தமானது அந்த இரு நாடுகளுக்கும் தீவிர ஆபத்தை ஏற்படுத்தும்’ என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# எரிபொருள் சிக்கனம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த 500 பேர் பங்கேற்ற சைக்கிள் பேரணி



சென்னை, மே, 1 -
சென்னை, மணலி பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் எரிபொருள் சிக்கனம் விழிப்புணர்வு குறித்து SAKSHAM என்ற பெயரில் நடத்திய சைக்கிள் பேரணியில் 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

மணலி சிபிசிஎல் தொழில் நுட்ப கல்லூரியில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில், தேசிய கிக் பாக்ஸிங் ரெஃபரி சுரேஷ் பாபு, தேசிய கிக் பாக்ஸிங் வீராங்கனை சுப்ரஜா, நடிகை லாவண்யா, நடிகர் ஆனந்த் செல்வன், சிபிசிஎல் பொது மேலாளர் பாபி ராஜ் உள்ளிட்டோர் சைக்கிள் பேரணியை கொடி அசைத்து தொடங்கி வைத்தனர்

சைக்கிள் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு பெட்ரோலிய நிறுவனம் சார்பில் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்தியாவில் நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற புதுப்பிக்கப்பட முடியாத எரிசக்தி அளித்து வரும் சுரங்கங்கள் தற்போது குறைந்துவிட்டதால் ஒட்டுமொத்த உலகமும் இதில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. தற்போது நம்மிடம் உள்ள கச்சா எண்ணெய் மற்றும் நிலக்கரி சுரங்கங்கள் அடுத்த 50 ஆண்டுகளில் தீர்ந்து விடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதால் மக்களிடையே எரிபொருள் சேமிப்புகுறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த சைக்கிள் தினம் கொண்டாடப்படுகிறது.

இரு சக்கர வாகனங்கள், கார்கள் உள்ளிட்ட வாகனங்களை அளவோடு பயன்படுத்தி எரிபொருளை சேமிக்க வேண்டும். மேலும் சுற்றுச்சூழல் பாதுகாக்கப் படவேண்டும் என்பது குறித்து நடத்தப்பட்ட விழிப்புணர்வில் வருங்கால இளைஞர்களின் உடல் வலிமையை பாதுகாக்கவும், சைக்கிள் ஓட்டுவதினால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கிக் பாக்சிங் வீராங்கனை சுப்ரஜா சிபிசிஎல் நிறுவனம் மூலம் நடைபெற்ற சைக்கிள் தினத்தில் தானும் கலந்து கொண்டு ஐந்து கிலோ மீட்டர் தூரம் சைக்கிளில் சென்றது மகிழ்ச்சி ஏற்படுத்தியதாக தெரிவித்தார். சைக்கிள் ஓட்டுவதினால் உடல் முழுவதும் உடற்பயிற்சி செய்தது போல் உள்ளது என்று தெரிவித்தார்.

விளையாட்டு என்பது சிறுவயதிலே குழந்தைகளுக்கு கற்றுத் தர வேண்டும். சைக்கிள் ஓட்டுவது மகிழ்ச்சியான உடற்பயிற்சியாகும். சிராய்ட் போன்று ஊக்க மருந்தில்லாமல் உடற்பயிற்சி செய்தாலே உடல் வலிமை பெறும் என்று கூறினார். விளையாட்டு வீராங்கனைகள் என்றாலே பலம் வாய்ந்து தான் இருப்பார்கள். இருந்தாலும் தங்களைக் காத்துக் கொள்ள தற்காப்பு கலையை கற்றுக்கொள்ள வேண்டும். நாம் என்ன கட்டுப்பாட்டோடு இருந்தாலும் அதனை தடுக்க முடியாது. பெண்கள் அனைவரும் தற்காப்பு கலையை கற்றுக் கொண்டால் மட்டுமே அவர்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என தெரிவித்தார்.

# அனுமதியின்றி மணல் ஏற்றி சென்ற டிராக்டர் பறிமுதல் டிரைவர் கைது: 2 பேர் தலைமறைவு



ஈரோடு, மே, 1 -
ஈரோடு மாவட்டம், கொடுமுடி அடுத்த கொந்தளம் கிராமம், கொம்பனைபுதூர், நால்ரோடு பகுதியில் ஆற்றில் ஒரு டிராக்டரில் அனுமதி இன்றி மணல் ஏற்றிக் கொண்டிருப்பதாக கொடுமுடி சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரனுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அப்போது அங்கு அனுமதி இன்றி டிராக்டரில் மணல் ஏற்றி கொண்டிருப்பது தெரிய வந்தது. அந்த டிராக்டரை பிடித்து அதிகாரிகள் சோதனை செய்த போது இரண்டு யூனிட் மணல் இருப்பது தெரியவந்தது. மேலும் அந்த டிராக்டர் உடன் பதிவு இல்லாத டிரெய்லர் இருப்பதும் தெரியவந்தது.

டிரைவரை பிடித்து போலிசார் விசாரித்த போது அவர் சேலம் மாவட்டம், நல்ல சொல்லிப்பாளையம் பகுதியைச் சேர்ந்த சூர்யா (32) என தெரிய வந்தது. அவரிடம் விசாரித்த போது கொடுமுடி பகுதியை இருந்த குணசேகரன் என்பவரிடம் டிரைவராக பணியாற்றுவது தெரிய வந்தது. போலீஸ் விசாரணையில் பல்வேறு தகவல் வெளியாகின.

தற்போது கொளத்துப்பாளையம் பகுதியில் ஊராட்சி மன்ற கட்டிடம் கட்டும் பணி நடந்து வருகிறது. இதன் ஒப்பந்ததாரராக சிவகிரி அஞ்சூர், முத்துக்கவுண்டன் பாளையம் பகுதியைச் சேர்ந்த செல்லமுத்து என்பவர் இருந்துள்ளார் எனபதுடன் ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் மேற்பார்வையில் இப்பணி நடந்துள்ளதாக தெரிய வந்தது.

இந்த கட்டிடம் கட்டுவதற்கு தேவையான மணலை செல்லமுத்து வற்புறுத்தலின் பேரில குணசேகரன் தனது டிரைவர் சூர்யாவை அனுப்பி அனுமதியின்றி மணலை டிராக்டரில் ஏற்றி வந்தது தெரிய வந்தது. இது குறித்துகொடுமுடி வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் கொடுத்த புகாரின் பேரில் டிரைவர் சூர்யாவை போலீசார் கைது செய்தனர். மணல் கடத்திய டிராக்டரை கொடுமுடி போலீஸ் நிலையத்தில் நிறுத்தி வைத்துள்ளனர். இந்த வழக்கில் தலைமறைவாக இருக்கும் குணசேகரன் மற்றும் செல்லமுத்துவை தேடி வருகின்றனர்.



12வது தேசிய தற்காப்பு கலை போட்டிகள் மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் அகில இந்திய மஞ்சா வர்மக்கலை ஆசான் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் மதுரை திருச்சி கோவில்பட்டி சென்னை கோவை பொள்ளாச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். சண்டை முறைகள், பாட முறைகள் குறித்து மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது, ஏற்பாடுகளை ஆசான் ராஜேந்திரன் அறிவுறுத்தலின் படி ராஜசேகர் செய்திருந்தார்

# இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் 100 வது மனதின் குரல் வானொலி உரையாடலை கேட்க வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பு



ஈரோடு, மே, 1 -
இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நூறாவது மாதமாக "மனதின் குரல்" நிகழ்ச்சி மூலமாக வானொலியில் உரையாற்றுதல் நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன் அனைவருக்கும் இந்த உரையாடலை கொண்டு சேர்க்கும் வகையில் வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பு விடுக்கப்பட்டது.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை அறிவுரையின்படி ஈரோடு மாநகராட்சி 49-வது வார்டு, 158-பூத் அரவிந்த் நகரில் பாஜக தமிழ்நாடு விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாநில துணைத்தலைவர் அக்னி ராஜேஷ் ஏற்பாடு செய்து பொது மக்களுக்கு வீடு வீடாக நேரடியாக சென்று துண்டு பிரசுரத்தை விநியோகம் செய்து வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தார்.

உடன் பாஜக அமைப்பு சாரா தொழிலாளர் பிரிவு மாநில செயலாளர் மற்றும் சக்தி கேந்திர பொறுப்பாளர் ரவீந்திரன், பாஜக ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் (இளைஞர் அணி) பிரியா, சென்னிமலை வடக்கு மண்டல பொதுச்செயலாளர் பரமசிவம், சக்தி கேந்திர பொறுப்பாளர் நல்லசாமி ஆகியோர் இருந்தனர்.

# கெயில் இந்தியா நிறுவனம் சார்பில் எரிபொருள் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு: சக்ஷம் சைக்ளோத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது





காரைக்கால், மே 1 -
மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பெட்ரோலிய பாதுகாப்பு ஆராய்ச்சி சங்கத்தின் (PCRA) முயற்சியான “நிகர பூஜ்ஜியத்தை நோக்கி ஆற்றல் பாதுகாப்பு” என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக கெயில் நிறுவனம் சார்பில் சைக்ளோத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சைக்ளோதானின் நோக்கம் எரிபொருள் சேமிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் குறைந்த தூரத்திற்கு சைக்கிள் பயன்பாட்டை ஊக்குவிப்பது பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதாகும். இந்நிகழ்ச்சியில் சுமார் 150 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். அறிஞர் அண்ணா கலை கல்லூரி மைதானத்தில் நிகழ்வு நடத்தப்பட்டது.

பங்கேற்பாளர்கள் காரைக்கால் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள். மேலும் காரைக்கால் சைக்கிள் கிளப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 8 கி.மீ. தூரம் மிதிவண்டி ஓட்டி அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முடித்தனர்.

சைக்கிள் ஓட்டுபவர்களை கொடியசைத்துதுவக்கிவைத்த கெயில் நிறுவனம் பொது மேலாளர் என்.செல்வராஜு, புதைபடிவ எரிபொருட்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், 'நெட் ஜீரோ' மற்றும் புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஆற்றல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு வழங்கினார். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ஆரோக்கியமான சூழலை வழங்குவதில் கெயிலின் பல்வேறு முயற்சிகள் குறித்தும் விளக்கினார். தலைமை விருந்தினரான ஜி.ஜான்சன், துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) காரைக்கால், புதைபடிவ எரிபொருட்களின் உகந்த பயன்பாட்டை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், எதிர்கால சந்ததியினருக்கு அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உரையாற்றினார். இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் பேரிடர் மேலாண்மை பாஸ்கர் கலந்து கொண்டு இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தும் கெயில் நிறுவனத்தை பாராட்டினார்.

சி.விவேகானந்தா டி.எம், இந்திய கடலோர காவல்படை, காரைக்கால் கமாண்டன்ட், 8 கிமீ மிதிவண்டியில் பயணிக்கத் தயாராக இருந்த பங்கேற்பாளர்கள் அனைவரையும் பாராட்டினார். மேலும், பங்கேற்பாளர்களை பாதுகாப்பான பயணத்திற்கு ஊக்குவித்தார். ஏ.சுப்பிரமணியன், காவல் துறை கண்காணிப்பாளர், (தெற்கு), அனுராக் ஓஎன்ஜிசி, கே.ராஜசேகரன், முதன்மை கல்வி அதிகாரி மற்றும் அறிஞர் அண்ணா கல்லூரியின் முதல்வர் சி.விவேகானந்தர், ஐ.சி.ஜி.எஸ் காரைக்கால், பி.என்.மாறன், சிஜிஎம், ஓஎன்ஜிசி விஜபிக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய அனுராக் ஓஎன்ஜிசி, பெட்ரோலியப் பொருட்களின் பயன்பாட்டை மாற்றவும், குறைக்கவும் தனிநபர்கள் எடுக்கும் சிறிய முயற்சிகள், நடைபயிற்சி அல்லது சைக்கிள் ஓட்டுதல், பொது போக்குவரத்து, ஆற்றல் திறன் கொண்ட உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கவனமாகப் பயன்படுத்துதல் போன்றவற்றில் பங்களிக்க முடியும் என்று வலியுறுத்தினார்.

காரைக்கால் சைக்ளோதான் 2023 இல் பங்கேற்ற பத்து பேருக்கு (2 சிறுவர்கள் & 2 பெண்கள்) அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய சுழற்சிகள் வழங்கப்பட்டன. கெயில் டிஜிஎம் கணேஷ் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

# டுவிட்டர் நிறுவனத்தில் மகப்பேறு கால விடுமுறையை 140 நாட்களில் இருந்து 14 நாட்களாக குறைத்த எலான் மஸ்க்

அமெரிக்க, மே, 01 -
பிரபல சமூக வலைதளமான டுவிட்டர் நிறுவனத்தை உலக பணக்காரரான எலான் மஸ்க் வாங்கிய பிறகு பல்வேறு அதிரடி மாற்றங்களை கொண்டு வந்தார். ஏராளமான ஊழியர்களை பணி நீக்கம் செய்தார். இந்த நிலையில் டுவிட்டர் நிறுவனத்தில் மேலும் ஒரு மாற்றத்தை எலான் மஸ்க் செய்துள்ளார்.

குழந்தை பிறந்த பிறகு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பெற்றோர் விடுப்பு 20 வாரங்களாக இருந்தது. அதை 2 வாரங்களாக



எலான் மஸ்க் குறைத்து உத்தரவிட்டுள்ளார். அதாவது 140 நாட்களில் இருந்து வெறும் 14 நாட்களாக விடுமுறை குறைக்கப்பட்டுள்ளது. எலான் மஸ்க்கின் இந்த அறிவிப்புக்கு பலர் எதிர்ப்பு தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக டுவிட்டரில் பயனர் ஒருவர் கூறும்போது, "டுவிட்டரில் அவமானம். இரண்டு வாரங்கள் மட்டுமே சம்பளத்துடன் கூடிய பெற்றோர் விடுப்பு? இது சரியான வழி இல்லை" என்றார். இதேபோல் மற்ற பயனர்கள் கூறும்போது, "திவால் நிலையை எதிர்கொள்ளும் ஒரு நிறுவனம் மட்டுமே இதை செய்யும். இது குழந்தைகளை பெறாமல் இருந்த உங்கள் ஊழியர்களை ஊக்குவிக்கும்" என்று கடுமையாக விமர்சித்துள்ளனர்.






▶ ரோட்டரி மாவட்டம் 3000 புதுக்கோட்டை ரோட்டரி சங்கம் 70 ஆம் ஆண்டு விழா புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா மஹாலில் நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஆர் ஐ டைரக்டர் வெங்கடேஷ், முன்னாள் ஆளுநர்கள் முருகானந்தம், கண்ணன், சொக்கலிங்கம், தற்போதைய ஆளுநர் ஜெரால்டு, வருங்கால ஆளுநர்கள் ஆனந்த ஜோதி, ராஜா கோவிந்தசாமி, கார்த்திக் உள்ளிட்டோரும் கௌரவ விருந்தினராக தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோரும் பங்கேற்று சிறப்பித்தார். புதுக்கோட்டை ரோட்டரி சங்க நிர்வாகிகள் 70 ஆம் ஆண்டு விழா தலைவர் அருணாச்சலம், செயலாளர் அருண், பொருளாளர் காசிராஜன், தற்போதைய தலைவர் பிரகாஷ், செயலாளர் பழனியப்பன், பொருளாளர் ஆரோக்கியசாமி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகளும் பங்கேற்று புதுக்கோட்டை ரோட்டரி சங்கத்தை வாழ்த்தி சிறப்பித்தனர்.

# சந்திரபாபு நாயுடுவுக்கு ரஜினிகாந்த் புகழாரம் அமைச்சர் ரோஜா ஆவேசம்

திருப்பதி , மே.1-

ஆந்திராவின் முன்னாள் முதல்வர் என்.டி. ராமாராவின் நூறாவது பிறந்த நாள் நிகழ்ச்சி, விஜயவாடாவில் வெள்ளிகிழமை நடந்தது. தெலுங்குதேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு என்.டி.ஆர் மகன் நடிகர் பாலகிருஷ்ணா கலந்துகொண்டனர். இதில் நடிகர் ரஜினிகாந்த் கலந்து கொண்டு பேசினார். அப்போது "சந்திரபாபு நாயுடு ஒரு தீர்க்கதரிசி, தொலைநோக்கு பார்வை கொண்ட அரசியல் தலைவர். அவரது தொலைநோக்கு பார்வையால், ஐதராபாத் இப்போது ஹைடெக் நகராக மாறியுள்ளது. ஐதராபாத், நியூயார்க் போன்று வளர்ந்துள்ளது" என்றார். இந்த பேச்சுக்கு ஆந்திராவில் உள்ள மற்ற கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஆந்திர மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் ரோஜா கூறியதாவது:- ரஜினிகாந்த்தின் பேச்சு சிரிப்பை வரவழைக்கும் வகையில் உள்ளது. ரஜினிகாந்த் உண்மை அறிந்து பேசினாரா என்று தெரியவில்லை. ரஜினிகாந்த் அனைவரும் விரும்பக்கூடியவர். ஹீரோவாக உள்ள நிலையில் அவர் உண்மை தெரிந்து பேசினாரா என்பது தெரியவில்லை. தெலுங்கு தேசம் கட்சியின் பஜனைக் கூட்டமாக நடைபெற்ற இந்த



மாநாட்டில் சந்திரபாபு எழுதிக் கொடுத்த ஸ்கிரிப்ட்டை படித்தாரா. ரஜினிகாந்த் தன் உரையில் "விண்ணுலகில் இருந்து சந்திரபாபு நாயுடு மீது என்.டி.ஆர் ஆசிகளை பொழிகிறார்' என்று குறிப்பிட்டார். என்.டி.ஆரின் மரணத்துக்கு காரணமே சந்திரபாபு நாயுடுதான் என்பது அனைவருக்கும் தெரியும். பிரதமர் மோடி பிரதமராக கூடிய தகுதி கொண்ட என்.டி.ராமராவை சூழ்ச்சி செய்து அவரது பலத்தால் வெற்றி பெற்ற எம்.எல்.ஏ.க்களை அவருக்கு எதிராக திசை திருப்பி சட்டப்பேரவையில் இருந்து அழுது கொண்டு என்.டி.ராமராவ் வெளியே வர காரணமாக இருந்தவர் சந்திரபாபு நாயுடு.

அப்போது என்.டி. ராமராவ் பேசுகையில், சந்திரபாபு ஒரு திருடன். ஈரத் துணியை கழுத்தில் போட்டு இறுக்கக்கூடியவன் என பேசினார். சந்திரபாபு நாயுடு துரோகம் குறித்து என்.டி. ராமராவ் பேசியது ரஜினிகாந்துக்கு தெரியாதா. அவருக்கு தெரியவில்லை என்றால் என்.டி. ராமராவ் பேசிய சிடி என்னிடம் உள்ளது. அதை அனுப்பி வைக்கிறேன். பார்த்து தெரிந்து கொள்ளட்டும். ஐதராபாத் நியூயார்க் நகரை போன்று மாறி இருப்பதற்கு சந்திரபாபு நாயுடுவின் தொலைநோக்கு விஷன் காரணம் என கூறியுள்ளார். 2003-வது ஆண்டுடன் ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு ஆட்சிக்காலம் முடிந்துவிட்டது. அதன்பின்னர், இப்போது 20 ஆண்டுகள் கழித்து பார்க்கும்போது ஐதராபாத் நகரம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக ஐதராபாத் பகுதியை ஆட்சி செய்யாத சந்திரபாபு நாயுடு, அந்த நகரின் வளர்ச்சிக்கு எப்படி காரணமாக இருக்கமுடியும் என்பதை ரஜினிகாந்த் நினைத்து பார்க்க வேண்டும். விஷன் 2047 என சந்திரபாபு அறிவித்து உள்ளார்.

அதுவரை அவருடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கோடாலி ஸ்ரீவெங்கடேஸ்வரராவ் எம்.எல்.ஏ. ரஜினி காந்தின் பேச்சுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் ஹீரோவாகவும், இங்கு ஜீரோவாகவும் இருக்கும் ரஜினிகாந்தின் வார்த்தைகளை ஆந்திர மாநில மக்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என தெரிவித்துள்ளார்.



▶ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் குமந்தபுரத்தில் சமுதாய நலக்கூடத்தில் பாரதிய ஜனதா கட்சியினரும், கடையநல்லூர்1-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் ரேவதி பாலீஸ்வரன் முன் ஏற்பாட்டில் 100-வது மனதின் குரல் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி உரையாடும் காணொளி காட்சி நடைபெற்றது. இதில் நகரத் தலைவர் சுப்பிரமணியன், குமந்தபுரம் ஊர் நாட்டான்மைகள் சுந்தரபாண்டியன், அர்ஜுனன், காளி ராஜ், பாஜகவினர்கள் முருகானந்தம், பட்டவராயன், ராஜேஷ், சங்கர் கணேஷ், பால்துரை, சுபாஷ் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் குழந்தைகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மதுரையில் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி



மதுரை,மே.01-

தூங்கா நகரை தூய்மை நகராக்குவோம் என்பதை வலியுறுத்தி மதுரை மாநகராட்சி மற்றும் திருநகர் சி.எஸ்.ஆர்.ராமாச்சாரி நினைவு உயர்நிலைப்பள்ளி இணைந்து நடத்திய சைக்கிள் பேரணி மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அருகே நடைபெற்றது. பேரணியை மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி, மாநகராட்சி ஆணையாளர் சிம்ரன்சித்ஜிங் காலோன் ஆகியோர் தொடங்கி வைத்தனர், பேரணி ஜான்சிராணி பூங்காவில் தொடங்கி மீனாட்சி அம்மன் கோவிலை சுற்றி விளக்கத்தூன் காமராஜர் சாலை வழியாக தெப்பக்குளத்தை வந்தடைந்தது. பேரணியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, பேரணி ஏற்பாடுகளை திருநகர் சி.எஸ். ஆர்.ராமாச்சாரி நினைவு பள்ளி ஆசிரியை பூர்ணிமா வெங்கடேஷ், விஷ்வாடுகாத்தி செய்திருந்தனர்.

இதில் உதவி ஆணையாளர் மனோகரன், நகர்நல அலுவலர் வினோத்குமார், சுகாதார அலுவலர்கள் வீரன், கோபால் மற்றும் தன்னார்வலர் வினோத் நாகராஜன், திருநகர் அடைக்கலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சந்திப்பு

புதுக்கோட்டை,மே.1-

சுதர்சன் பொறியியல் கல்லூரி திருச்சி-புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சுதர்சன் பொறியியல் கல்லூரியில் முன்னாள் மாணவ, மாணவியர் சந்திப்பு வெகு விமர்சையாக நேற்று நடந்தது.

இதில் கல்லூரியின் முதல் பேட்ச் மாணவர்கள் உள்பட 200 பேர்கள் கலந்து கொண்டு தங்கள் கல்லூரி , வேலை, அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு சுதர்சன் கல்வி குழுமத்தின் நிறுவனத் தலைவர் ஸ்ரீ




வி.கே சுந்தரம், நிர்வாகி ஸ்ரீமதி இராஜீ சுந்தரம் மற்றும் தாளாளர் ஸ்ரீ கே. விஜயகுமார் தலைமை தாங்கினர், நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் கே. ஸ்ரீனிவாசன் துவக்க உரை ஆற்றி தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட அனைத்து முன்னாள் மாணவர்களும் சேர்ந்து முன்னாள் மாணவச் சங்கத்தின் சார்பாக கல்லூரிக்கு நினைவு பரிசு வழங்கினர், மேலும் தங்களுடைய நினைவுகளையும் வேலை அனுபவங்களையும் குறித்து அனைவருடன் பகிர்ந்து கொண்டனர்.

# ஆலங்குடி அருகே மதுபோதையில் தகராறு ஒருவர் அடித்து கொலை

ஆலங்குடி, மே.1-

ஆலங்குடி அருகே மதுபோதையில் நண்பாகளுக்குள் ஏற்பட்ட தகராறில் ஒருவா அடித்து கொலை செய்யப்பட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கீரமங்கலத்தில் விருதுநகா மாவட்டத்தை சோந்த அய்யாசாமி மகன் முருகன் (30), தனசேகர்(29), தங்கசாமி(53) ஆகிய மூவரும் கட்டிட வேலைக்காக கீரமங்கலத்தில் தங்கி வேலைபார்த்து வந்தனா.



இந்நிலையில் முருகன், தனசேகர், தங்கசாமி மூவரும் கீரமங்கலம் வந்து மது அருந்திவிட்டு செல்லும்பொழுது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு முருகன் தனசேகரனை தகாத வார்த்தையில் திட்டியதாகவும் அதில் கோபம் அடைந்த தனசேகர் அருகே கிடந்த கட்டையை எடுத்து முருகனை அடித்ததில் முருகன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார், சம்பவ இடத்திற்கு வந்த கீரமங்கலம் போலீசார், தனசேகர் மற்றும் தங்கசாமி இருவரையும் கைது செய்தனா, மேலும் முருகன் உடலை மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனா.

## ஆவுடையார்கோவில் தனியார் பள்ளி அளவில்

# கராத்தே வகுப்புகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு தகுதி பட்டயம் வழங்கும் விழா

ஆவுடையார்கோவில், மே.1-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தனியார் பள்ளி அளவில் கராத்தே வகுப்புகளில் பயிற்சி பெற்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தகுதி பட்டயம் வழங்கும் விழா நடைபெற்றது, தக்ஸ்னாஸ் மார்ஷியல் ஆர்டீங்கடம்பன் சிலம்பப் பள்ளி கராத்தே தகுதி பட்டையம் வழங்கும் விழா சென் ஜோசப் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை பேரருள் ஆரோ அருளரசு தாளாளர் சென்ஜோசப் பள்ளி முன்னிலை வகித்தார், அருள் திரு எஸ் பிரியங்கோ எடியின்



தகுதி பட்டயம் வழங்கினார், பாலசுப்பிரமணியன் நிறுவனர் எம்.சரவணன் ஒன்றிய தலைமை தக்ஸ்னாஸ் நன்றி உரை நிகழ்த்தினார். இதில் மஞ்சள், பச்சை, ஆரஞ்சு, கருப்பு பெல்ட் தகுதி உடையவர்களுக்கு வழங்கப்பட்டது. பயின்ற மாணவ, மாணவிகள் ஓடுகள் உடைத்தல் உள்பட பல்வேறு திறமைகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி பட்டங்களை வாங்கி சென்றனர், நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு கராத்தே பயின்ற மாணவ ,மாணவிகளையும் அவர்களுடைய திறமைகளையும் வியந்து பாராட்டினர்.

# மதுரை சித்திரைத் திருவிழா பாதுகாப்புப் பணியில் 5 ஆயிரம் போலீஸார் கூடுதல் டிஜிபி சங்கர் தகவல்

மதுரை , மே.1-

சித்திரை திருவிழா பாதுகாப்புப் பணியில் சுமார் 5 ஆயிரம் போலீஸார் ஈடுபடுத்தப்பட உள்ளதாக தமிழக கூடுதல் டிஜிபி சங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழக கூடுதல் டிஜிபி சங்கர் மதுரை வந்தார். சித்திரை திருவிழாவையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தார். இதைத்தொடர்ந்து மீனாட்சி அம்மன் கோயிலில் திருக்கல்யாணம் நடக்குமிடம், தேரோட்டம், கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல் உள்ளிட்ட இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். பாதுகாப்பு குறித்து பல்வேறு ஆலோசனைகளை அவர் வழங்கினார். மாநகர காவல் ஆணையர் நரேந்திரன், தென்மண்டல ஐஜி அஸ்ரா கார்க், டிஐஜி பொன்னி, துணை ஆணையர்கள் சாய் பிரனீத், அரவிந்த் , காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.

இந்நிலையில், மதுரை பாண்டிக்கோயில் அருகே தனியார் மண்டபத்தில் இன்று நடந்த விருதுநகர், மதுரை மாவட்டபொதுமக்கள்



குறைதீர்க்கும் கூட்டத்தில் கூடுதல் டிஜிபி பங்கேற்றார். இதில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்களிடம் இருந்து 246 மனுக்கள் பெறப்பட்டன. 170மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. எஞ்சிய மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு கூடுதல் டிஜிபி அறிவுறுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: "முதல்வரின் உத்தரவின்பேரில், இதுபோன்ற சிறப்பு முகாம் மூலம் புகார் கொடுக்கும் நபர்களின் மனுக்கள் மீது விசாரணை செய்யப்படுகிறது. இருதரப்பினரையும் நேரில் அழைத்து விசாரித்து தீர்வு காணப்படுகிறது. புகார்களை விசாரிக்கும் முறை பாரபட்சமின்றி சிறப்பாக இருக்கவேண்டும், பொதுமக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காகவே காவல்துறையால் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது

இந்தாண்டு மதுரை சித்திரைத் திருவிழாவுக்கென 10 எஸ்பிக்கள் தலைமையில் சுமார் 5 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும் கஞ்சா வியாபாரிகளின் சொத்துக்கள், வங்கி கணக்குகள் முடக்கப்படுகின்றன" என்றார்.

இக்கூட்டத்தில் தென்மண்டல ஐஜி அஸ்ரா கார்க், மாநகர காவல் ஆணையர் நரேந்திரன், துணை ஆணையர்கள் சாய் பிரனீத், அரவிந்த், மங்களேசுவரன், ஆறுமுகசாமி, விருதுநகர் எஸ்பி சீனிவாச பெருமாள் மற்றும் மதுரை , விருதுநகர் மாவட்ட காவல்துறை உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

## தென்காசி மாவட்டத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம்

# பயனடைந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை சார்ந்த பயனாளிகள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்

தென்காசி , மே.1-

மகளிரின் வாழ்க்கையின் ஏற்றத்தில் தனி கவனம் செலுத்தி மகளிர் சுயமாக தனது சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காக தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞரின் மகளிர் சுய உதவி குழுக்களை தொடங்கி வைத்தார். தற்போதைய காலத்தில் மகளிர் சுய உதவி குழுக்களில் அதிகமான பெண்கள் சேர்ந்து பயன்பெறும் வகையில் பல்வேறு கடன் உதவிகளை வழங்கி செயல் படுத்தி வருகிறார். இக்குழுக்களின் மூலம் பெண்கள் கணவரை இழந்தவர்கள் முதியோர்கள் ஆகியோர் பயனடைகிறார்கள்,

தமிழக முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்றவுடன் மகளிர் சுய உதவி குழு கடனை தள்ளுபடி செய்து மகளிருக்கு முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் முதலமைச்சராக திகழ்கிறார். மகளிர் பயன்பெறும் வகையில் அரசு பேருந்துகளில் இலவச பேருந்து பயணம், தமிழ்நாடு நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் மாநிலத்தில் இருசக்கர வாகனம் வழங்கி மகளிரின் வாழ்வில் ஒளி ஏற்றி உள்ளார்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பயனடைந்த பயனாளி எஸ். வளர்மதி தெரிவித்ததாவது;-

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பேரூராட்சியை சேர்ந்த வார்டு 3ல் வசித்து வரும் வளர்மதி ஆகிய நான் வறுமை கோட்டின் கீழ் வாழும் சாமுவேல் செல்லையா, w/o ரஞ்சிதத்திற்கு எட்டாவது மகளாக பிறந்தேன். எனக்கு மூத்த ஐந்து சகோதரிகளும் ஒரு சகோதரனும் தற்போது




இருக்கின்றனர். நான் என் கல்லூரி படிப்பை முடித்து பிறகு என் தகப்பனார் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையானார். மரணம் தன்னை நெருங்குவதை உணர்ந்து என் தகப்பனார் எனக்கு உடனே திருமணம் செய்து வைக்க விரும்பி அவசர அவசரமாக இரண்டு வாரத்திற்குள் மாப்பிள்ளை பார்த்து திருமணம் முடித்து வைத்து விட்டார்.

நிறைய கனவுகளுடன் இருந்த எனக்கு அது மிகவும் ஏமாற்றமாக இருந்தது என் திருமணம் என் கனவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. என்னை வேலைக்கு அனுப்ப என் கணவர் விரும்பவில்லை. சில வருடம் சென்ற பின் குழந்தைகளும் பிறந்தது. என் தேவைகளும் அதிகமாகியது அந்த சூழ்நிலையில் என் குடும்பம் கஷ்ட சூழ்நிலைக்கு மாறியது. அப்பொழுதுதான் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2016ல் எனது ஆலங்குளம் பேரூராட்சியில் தெரியவந்தது. அதன் மகளிர் திட்டம் சமுதாய அமைப்பாளர் மூலம் 15 நபரை வைத்து நட்சத்திரங்கள் மகளிர் சுய உதவிக் குழு ஒன்று அமைத்தேன். அதில் ஊக்குனராக செயல்பட்டு மூன்று மாதம் கழித்து ரூபாய் பத்தாயிரம் சுழல் நிதியும் பெற்று சிறப்பாக குழுவை நடத்தி வந்தேன். குழுவில் சேமிப்பும் அதிகரித்தது அதன் மூலம் சிறு கடன் மற்றும் உள் கடன் பெற்று சேலை, ஜாக்கெட்துணி, வாங்கி வியாபாரம் ஆரம்பித்தேன். பையை வைத்து வீடு வீடாக சுமந்து கொண்டு விற்பனை செய்து வந்தேன். பின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்க மூலம் அம்மா இருசக்கர வாகனம் ரூபாய் 25 ஆயிரம் பெற்று வண்டி வாங்கினேன். அதன் பின் சுமந்து சென்று விற்பனை செய்த எனக்கு வண்டியில் சென்று விற்பதால் நிறைய ஊருக்கு சென்று விற்பனை செய்ய உதவியாக இருந்தது. வருமானமும் அதிகமாகி விட்டது அதில் என் முயற்சியையும் அதனால் வரும் லாபமும் என் கணவருக்கு நம்பிக்கையை கொடுத்ததால் தொடர்ந்து தொழில் செய்ய அனுமதித்தார்.

நானும் தன்னம்பிக்கையுடன் விடாமல் குழுவின் வரவு செலவு வைத்து மத்திய கூட்டுறவு வங்கியில் ஒரு நபருக்கு ரூபாய் 50,000 வீதம் 8 லட்சம் கடன் பெற்றோம். இதனை வைத்து அதிகம் சேலை சுடிதார் வாங்கி தொழிலை மேன்மைப் படுத்தினேன். மேலும் மாவட்ட தொழில் மையம் மூலம் கடன் மானியத்தோடு ரூபாய் 5 லட்சம் கடன் பெற்று தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் வழிகாட்டுதலின் மூலம் கிடைக்கப் பெற்றேன். ஆயிரம் சதுர வடிவில் தரைத்தளம் வசந்தம் சாரீஸ் என்ற பெயரில் ஒரு நிறுவனமாக உயர்ந்தது. தொழில் செய்வது மட்டுமன்றி என் போன்ற பெண்கள் தன்னம்பிக்கை பெரும் வகையில் வருமானத்திற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்கின்ற நோக்கில் லீபனோன் அறக்கட்டளை ஒன்றை ஆரம்பித்து தமிழ்நாடு நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பெண்களுக்கு தையல், கணினி அளவுகளை மற்றும் எம்பிராய்டரி டிசைன், இலவச திறன் மேம்பாட்டு பயிற்சியை அளித்து வருகிறேன். மற்றும் ரெடிமேட் என்கின்ற பெண்களுக்கான ரெடிமேட் ஜாக்கெட் தயாரிப்பு நிறுவனம் ஆரம்பித்து வருகிறேன். தற்போது ஏஎல்எப் 2018ல் ஆரம்பித்தோம் அதன் மூலம் இரண்டு குழுக்களை இணைத்து கூட்டமைப்பின் கூட்டங்கள் மாதந்தோறும் செயல்படுத்தி ஆர் எஃப் ரூபாய் ஐம்பதாயிரம் பெற்று கடன் கொடுத்து சேமிப்பும் ஏ எல் எஃப்க்கு கிடைத்தது.

அதனை வைத்து ஏ எல் எஃப் மகளிர் திட்ட மூலம் தர மதிப்பீடு பெற்று 50 லட்சம் பெற்று குழுவிற்கு 5 லட்சம் வீதம் பத்து குழுக்களுக்கும் பெற்று அனைத்து குழுக்களையும் சுய தொழில் தொடங்கவும் மேலும் பிஎம் எஃப் எம் இ மூலம் ஆன்லைன் பதிவு செய்து தொழில் செய்பவருக்கு வட்டியில்லா கடன் பெறவும் போற்றல் என்ட்ரி செய்தும் அந்தப் பதிவின் மூலம் ரூபாய் 40 ஆயிரம் வீதம் 10 நபருக்கு பதிவு செய்தும் கொடுத்தனர். சமுதாய அமைப்பாளர் இவ்வாறு பல வழிகளில் நிதி பெற்று அதன் வழியாக வறுமை கோட்டின் மக்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கோடு ஏ எல் எப் செயலாளராக செயல்பட்டு வருகிறேன்.

தற்போது மூன்று வருடம் ஏஎல்எப் நிறைவடைந்த காரணத்தினால் செயலாளராக இருந்து ஈசி உறுப்பினராக இருந்து வருகிறேன். செயலாளர், பொருளாளர் மாற்றம் செய்து உறுப்பினராக இருந்தும் செயல்பட்டு வருகிறேன். எல்லா விதத்திலும் உறுதுணையாக நின்ற என் வாழ்வில் வெளிச்சம் பெற என் கனவை நனவாக்கிய தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்திற்கு என் குடும்பத்தின் சார்பாகவும் என் நிறுவனத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோல் மகளிர் சுய உதவி குழு மூலம் கடையநல்லூர் குலசேகரம் என்பவரும் பயன் அடைந்து தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றியை தெரிவித்துள்ளார்.

**தொகுப்பு**
**இரா.இளவரசி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**ராமசுப்பிரமணியன்**
**உதவி அலுவலர்**
**;தென்காசி மாவட்டம்**

### பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு. சின்னப்பா முதலாம் ஆண்டு நினைவு இன்று

# அறமனச்செம்மலும் 60 கவிஞர்களும் சிறப்பு கவியரங்கத்தில் பங்கேற்ற கவிஞர்கள்










நான்கு நாட்கள் நடைபெற்ற பல்கலைத்திறன் போட்டிகளை சிறப்பாக நடத்திய யோகா பாண்டியன் குழுவினருக்கு விழாக் குழுவின் சார்பில் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமையில் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது

புதுக்கோட்டை சத்தியமூர்த்தி நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் 'அறமனச்செம்மலும் 60 கவிஞர்களும்' எனும் தலைப்பில் 60 கவிஞர்களின் கவிதை அணிவகுப்பு நேற்று நடைபெற்றது. கவிஞர்கள் 'சிந்தை நிறைந்த சீனு சின்னப்பா' என்ற தலைப்பிலும், உழைப்பாளர் தினத்தைக் குறிக்கும் வகையில் 'அனுதினமும் மே தினமே' எனும் தலைப்பிலும் கவிஞர்களின் சங்கமம் நடைபெற்றது.






PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# பால் பொருட்கள் தொழிற்சாலையில் வாயு தாக்கி 11 பேர் பலி

# அமைச்சர் பிடிஆர் பதவியை பறிக்கக் கூடாது ஹெச். ராஜா வலியுறுத்தல்





# சந்திரபாபு நாயுடுவுக்கு ரஜினிகாந்த் புகழாரம்: ரோஜா கண்டனம்


சென்னை / புதுக்கோட்டை | 01.05.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

01.05.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**பி. சுந்தரய்யா** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், இடதுசாரி அரசியல்வாதி (பி.1913) (இ.1985)



**இராய் படையாச்சி** , தென்னாப்பிரிக்கத் தமிழ் அரசியல்வாதி (பி.1950) (இ.2012)



**சாலிந்த திசாநாயக்க** , இலங்கை அரசியல்வாதி (பி.1958) (இ.2019)



**அஜித் குமார்** , தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (பி.1971)



## இன்றைய நினைவு நாள்

**சுவாமி சகஜானந்தா** , தமிழக ஆன்மிகவாதி, அரசியல்வாதி (பி.1890) (இ.1959)



**ரணசிங்க பிரேமதாசா** , இலங்கையின் 3வது அரசுத்தலைவர் (பி.1924) (இ.1993)



**சீனு. சின்னப்பா** , தமிழக தொழிலதிபர் (பி.1953) (இ.2022)



## தொழிலாளர் தினம்